காதில், கட்டி விட்டு, 'அடே, பண்டாரம்! சீக்கிரம் போய், உன்னுடைய ராஜா விடம், நான் எழுதியதைக் காட்டு! என்று, துரத்தி விட்டது, கொம்பன்.

செம்புலிங்கப் பண்டாரம், தப்பித்ததே போதுமென்று, அரண்மனையை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

பாட்டு

"ஓட்டம் வெகு நடையா வெகு நடையா
ஒரு விரைவாய் பண்டாரம் வருகிறாரே
வண்டோட்டம் வெகுவிரைவாய் வெகுவிரைவாய்
வருகிறாரே பண்டாரம் அரண்மனைக்கு"

பண்டாரம் அரண்மனைக்கு வந்து, மணிமண்டபவாசலில் நின்று, அழுது கொண்டு, மாதர்களை கூப்பிட்டு 'ராஜாவை வரச் சொல்லுங்கள்' என்றார்.

மாதர்கள் உடனே பகடை விளையாடும் இடத்திற்குச் சென்று, சின்னண்ண சாமியிடம் 'ராஜாவே! நம்ம, பண்டாரம், அழுது கொண்டு மணிமண்டப வாசலில் நிற்கிறார், தூங்களை, தெரிந்தோ, கூப்பிடுகிறார்' என்றார்கள்.

மாதர்கள் சொன்னதைக் கேட்ட, சின்னண்ண சாமி 'ஆகா!' வென்று கோபத்துடன் எழுந்திருக்கும் போது, 12. விலங்கும், பழமென்று கத்தரித்து விட்டது.

பாட்டு

"எட்டடியே என்சாமி தாண்டுகின்றோ
இளையவில்லையோ என்சாமி குமரதங்கே
தாண்டி தாண்டிக் குதிக்கின்றாரோ.
தைரியங்கள் என்சாமி உள்ளமட்டும்"

---

சின்னண்ண சாமி, வேகமாக மணிமண்டப வாசலுக்கு ஓடிவந்து, 'ஏண்டா, பண்டாரம்! ஏன், அழுகின்றாய்? ஏன், உடம்பெல்லாம் தேதுதி நடுக்கிடக்கிறது? என்ன, சமாச்சாரம்?' என்றார்.

பண்டாரம்! 'ராஜாவே! நம்ம நாட்டுக்கு அழிவுகாலம் வந்து விட்டது, நரகம் தின்கிற பன்றி, செய்த வேலையை பாருங்கள்!' என்று, அதை திருப்பி காட்டினான்.

சின்னண்ண சாமி, பன்றி எழுதியதை படித்துப் பார்த்து விட்டு, அப்படியே மூன்று நாழிகை நேரம் மெய்சுணர்ந்து நின்று விட்டார். பிறகு, பெரியண்ண சாமியை நோக்கி 'அண்ணே! நாம், இனி, இந்தப்பூமியில் இருக்க புண்ணியமில்லை,

543.

நாகம் தின்று பிழைக்கும், ஒரு பன்றி எழுதியிருப்
பதை, பாருங்கள்! என்றார்.
பெரியண்ணசாமி, அதை பார்த்து விட்டு,
'அப்பா, சின்னய்யா! இதற்காக, நீ, கவலைப்
பட வேண்டாம், இந்தப் பன்றிக்காக, நாம்
உயிரை இழப்பதா? வேண்டாம், சாமி! பொறு
மையாக இரு,' என்றார். இங்கு, இவர்கள்
சத்தம் போட்டுக் கொண்டிருந்
ததை, பார்வதியாக காதில் கேட்டு, அண்ணரிடம்
ஓடிவந்து 'அண்ணா! என்ன, சமாச்சாரம்?
சத்தமாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?'
என்றாள்.) 245

246 சி. சாமி.' (தங்கமே! ஒரு பன்றி, நம், ஆயிரமா நிலத்தை
யும் அழித்து, நந்தா வனத்தையும் அழித்து
விட்டு, இப்போது, நம், மேல் சவால் விட்டு
எழுதியிருப்பதைப் பார்! மூன்று, நாளைக்குள், வீர
மலைக்கு அதன் மேல் சண்டைக்கு வர வேண்
டுமாம், வரத்தவறினால், மூன்று நாளைக்குப்
பின் பன்றி இங்கு வந்து, நம், நாடு, அரண்மனை,
ஆகியவைகளை அழித்து, எங்கள் இருவ
ரையும் கொன்று, விட்டு, உன்னைக் கொண்டு

போய் வீரதுங்கா பத்தினிக்கு, மஞ்சள் அரைக்கப் போடுவதாக எழுதியிருக்கிறது பார்! என்றார்.

பார்வதியாள், அதைப் படித்துப் பார்த்து விட்டு, 'அண்ணா! நாகம் சாப்பிடும் பன்றி எழுதியதைப் பார்த்து, நாம், அதன் மேல் சண்டைக்குப் போவதா, வேண்டாமண்ணா!' என்றாள்.

சி.சாமி! அது சரி, தங்கமே! அது, நம், மேல், சவால் விட்டு எழுதியிருக்கும் போது, நாம் போகாமல் இருந்தால், பன்றிக்கு பயந்து போகவில்லையென்று நாடு பூராவும், நம்மை கேவலமாகப் பேசும்; தவிர, நாம் மூன்று நாளுக்குள், சண்டைக்குப் போகாவிட்டால், பன்றி இங்கு வந்து, எங்களை கொன்று விட்டு, உன்னையும் கொன்று போவதாக எழுதியிருக்கிறது. ஆகையால், நாம் அந்தப்பன்றியை கொல்லவேண்டும்! இல்லையேல், சாகவேண்டும்! இரண்டில் ஒரு முடிவு, காண வேண்டும், தங்கமே!'

சி.சாமி. பாட்டு

''ஆனை ஆனைப்படையிலே இனிப்படையிலேதான்
ஆனிவந்து தங்கமே சூழ்ந்திட்டுதே
அய்யோ சூழ்ந்திட்டுதே
குதிரை குதிரைப்படையிலே இனிப்படையிலேதான்
கொடி வேங்கை தங்கமே சூழ்ந்திட்டுதே
அய்யோ சூழ்ந்திட்டுதே''

~~[illegible]~~ தங்கமே/ நாம், பன்றிமேல் சண்டை, பாரசண்டை போக, வேணும். கொம்பன் மேல் சண்டை, குடிகொட்டிப் போக வேணும்.'

பார்வதியாள்' அண்ணா/ நான், உங்களுக்கு சிறியவள், நான் சொல்கிறேன் என்று கோபப்படாதீர்கள்; அண்ணா/ வாயிக்குப்பிள்ளை, வயிற்றுக்கு மாத்தூணுங்கோ!'

பாட்டு

"பன்றியின்று போனதானால் அண்ணா
பழிகள் வந்து நேர்ந்திடுமே
கொம்பனென்று போனதானால்
அது கூற்று வதைய் மாறிடுமே!!"

---

பார்வதி.' அண்ணா! நான், சண்டைக்குப் போக வேண்டாமென்று சொல்லவில்லை; ஆனால், எனக்கொரு சந்தேகம், இருக்கிறது! அதாவது, நீங்கள் வீரமலைக் காட்டுக்கு, பன்றிமேல் சண்டைக்குப் போய், சண்டை ஜெயித்து, நம்ம தங்க வெடிஆயுதம், சுழுக்கம் வந்து சேருமென்றால். நம்ம வெள்ளி வெடிஆயுதம் வீடு வந்து சேருமென்றால், எனக்கு இருக்கும் சந்தேகத்தை இப்போது நிவர்த்தி செய்து பார்க்கவேண்டும், அண்ணா!

சி.சாமி./ என் தங்கமே! உன்னுடைய சந்தேகத்தை, எப்படி நிவர்த்தி செய்ய வேண்டும்? 246

பார்வதி:/ 247 அண்ணா! நாம் மூன்று பேரும் குளித்து விட்டு, ஒரு பிடி கடுகும், ஒரு பிடி மிளகும் எடுத்துக் கொண்டு, பிள்ளையார் கோவிலுக்கு சென்று, கோவில் முன் வெள்ளைமாத்து விரித்து, பெரிய அண்ணனை, வலது புறம் தெற்கு முகமாக நிறுத்தி, உங்களை தென்புறம் வடக்கு முகமாக நிறுத்தி விட்டு, நான், உங்கள் மத்தியில் நின்று, மண்டியிட்டு, கடுகையும் மிளகையும் இரண்டு கையாலும் மேலே வீசுவேன்! அப்போது, நீங்கள் கரணம் பாய்ந்து, கடுகும், மிளகும், கீழே வருவதற்குள், அவைகளை வெட்டி இரண்டு, துண்டு மூன்றாக, கடுகும் மிளகும் கீழே விழ வேண்டும்! அப்படி, நான் சொன்னது போல் செய்து விட்டால், நம்ம தங்க வெடி ஆயுதம், சிக்கம் வந்து சேர்ந்து விடும். வெள்ளி வெடி ஆயுதம் நம்ம வீடு வந்து சேர்ந்து விடும்.

அண்ணா! இதில்தான், நான் உங்கள் சமர்த்தை அறிய வேணும், தைரியத்தை பார்க்க வேணும்! என்றாள், பார்வதியா.

சி.சாமி! சரி, தங்கமே! அப்படியே, செய்வோமென்று,
மூன்று பேரும் குளித்து விட்டு, கடுகும், மிளகு
ம் எடுத்துக் கொண்டு, பிள்ளையார் கோவிலு
க்கு சென்றார்கள். பிள்ளையார் கோவில் முன்,
வெள்ளை மாத்து விரித்து, பார்வதியா சொன்
னது போல், பெரியண்ண சாமி, வலது புரம்
தெற்கு முகமாகவும், சின்னண்ண சாமி,
தென்புரம் வடக்கு முகமாகவும், கத்தியை
கையில் பிடித்து, நின்றார்கள். பிறகு, பார்வதி
யா இருவருக்கும் மத்தியில், ஒருகால
மண்டியிட்டு, ஒருகால குண்டி வாங்கி,
வடக்கு முகமாக உட்கார்ந்து, ஒரு
பிடி கடுகும், ஒருபிடி மிளகும் எடுத்து,
தெய்வ தவையை நினைத்து, மாயவரை நினைத்து
மேலே வீசினாள். கடுகும், மிளகும், இரண்டு
பனையுயரம் மேலே போய், பிறகு, சரம் கோர்
த்தது போல், வரிசையாக கீழே வந்தது.
சின்னண்ண சாமி அதைப் பார்த்ததும்.

பாட்டு

"முன் கரணம் என் சாமி பின் கரணம்
முப்பத்திரண்டு என் சாமி செல்க் கரணம்
கத்தி கத்தி சுழலட்டுறது அங்கே
கார் மின்னல் என் சாமி மின்னுது பார்."

சின்னண்ண சாமி கரணம் பாய்ந்து, கத்தியை மேலே
வீசியதும், கத்தி போய், கருகு, மிளகுகளை வெட்டி
இரண்டு, துண்டு மூன்று செய்து விட்டு,
சாமியுட கத்தி கை, வந்து சேர்ந்தது.
கருகும், மிளகும், துண்டு பட்டு கீழே வந்து
வெள்ளை மாத்தில் விழுந்ததும், பார்வதியா
ஓடி வந்து, தூங்க நேரத்தில் அவைகளை
போட்டு பொறைத்துப்பார்க்கும் போது,
ஒரு கருகும், ஒரு மிளகும், வெட்டுப்படாமல்
அப்படியே இருந்தது. அதைப் பார்த்து
பார்வதியா, நம், அண்ணர்கள்! எத்தனை நாள்
இருந்தாலும், வேடுவரால் அழிக்கப்படுவோர்
கள், என்று நினைத்து, நாம் இப்போது இதை
அண்ணரிடம் சொன்னால், யானைப்பலத்தில்,
அரைப்பலம் குறைந்து விடுமென்று, நினைத்துக்
கொண்டிருக்கும் போது.

சி.சாமி: ஏன், தங்கமே! கருகும், மிளகும், மூன்று துண்
டாகி விட்டதா? இல்லையா?'

பார்வதி: அண்ணா! அத்தனை, கருகும், மிளகும் ஒன்று கூட
தப்பாமல் மூன்று துண்டாக விழுந்து விட்டது.
அண்ணா! இன்னும், ஒன்று நான் பார்க்க வேண்டும்,
அதாவது, நீங்கள் வீரமலைக்காடு போனதும்,

பன்றியைக் கண்டதும், கத்தியை எடுத்து காட்டி, எந்தமாதிரி சண்டை செய்வீர்கள்? நான் பார்க்க வேண்டு, மண்ணு!') 247

248 சி.சாமி: சரி, நல்லது தங்கமே! அப்படியே, செய்வோம் என்றதும், பார்வதியா, சின்னண்ண சாமியை வலது புறம் தெற்கு முகமாக நிறுத்தி, பெரியண்ண சாமியை தென்புறம் வடக்கு முகமாக நிறுத்தி, பார்வதியா மத்தியில் நின்று, கத்தியை சுழட்டச் சொன்னாள்.

உடனே சாமி இருவரும், கத்தியை கையில் எடுத்து-

பாட்டு

"முன் காணம் என்சாமி பின் காணம்
முப்பத்திரண்டு என்சாமி சேல்க்காணம்"

---

அப்போது, மாயவர் ஒரு சூழ்ச்சி செய்தார், அதாவது, பெரியண்ண சாமியை, வேட்டுவரூபமாக செய்து விட்டார். சின்னண்ண சாமி கண்ணுக்கு மட்டும், வேட்டுவன் போல் தெரியும்படி செய்தார். அதைப்பார்த்த சின்னண்ண சாமி, 'ஆகா! வேட்டுவன், நம் நாட்டுக்கே, சண்டைக்கு வந்து விட்டானா? என்று, கோபம் வந்து

550,

பாட்டு

"கத்தி நல்லோ கத்தி சுழட்டுறது
கார் மின்னல் என் சாமி மின்னுதுபார்
ஈட்டி நல்லோ ஈட்டி சுழட்டுறது
எதிர் மின்னல் என்சாமி மின்னுதுபார்."

---

சின்னசாமி, நேயம் மாறியிருந்து பெரியண்ண சாமி மேல், கத்தியை வீசும் போது, கத்தி வார வேகத்தை பார்வதியா பார்த்து, ஏது, பெரிய அண்ணனை வெட்டி விடும் போல் இருக்கிறது என்று, ஓடிப்போய், கத்தியை கையில் பிடித்து நிறுத்திக் கொண்டு—

~~பார்வதி~~ 'சின்னண்ணா! நான், இல்லா விட்டால், இந்நேரம் பெரியண்ணனை கொன்றிருப்பீர்கள்?'

சி. சாமி. 'தங்கமே! நான், கொஞ்ச நேரத்திற்கு முன், அண்ணன் முகத்தை பார்க்கும் போது, வேட்டுவன் முகம் போல் தெரிந்தது அதனால் தான், நான் கத்தியை அண்ணன் மேல் வீசி விட்டேன், தங்கமே! என்றார்.

பார்வதி 'சரி, அண்ணா! வாருங்கள், அரண்மனைக்குப் போகலாமென்று, மூன்று பேரும் அரண்மனைக்கு வந்தார்கள். மூன்று பேரும் சாப்பிட்டு விட்டு, பார்வதியா திருவிண்தாரிக்கு படுக்க சென்றாள்.

சின்னண்ண சாமி சாப்பிட்டு விட்டு, தாம்பூலம் போட்டு வெளியில் வந்து, சாம்புகனை கூப்பிட்டார். சாம்புகன் வந்து சின்னண்ண சாமியை நமஸ்க்காரம் செய்தான்.

சி. சாமி. 'அடே, சாம்புகா! நாம், வெள்ளிக் கிழமை விடிஜந்து நாளிகைக்கு,
பன்றி மேல் சண்டை, பார சண்டை போகவேணும்!
கொம்பன் மேல் சண்டை, குடிதுரட்டிப் போகவேணும்!
உடனே, நீ, ஆயிரம் கிராமத்துக்கும், ஐம்பத்தாறு தேசத்துக்கும், தாட்டுப்பறை சாட்டி விடு' என்றார்.

சாம்புகன். 'ராஜாவே! நல்லது; ஆனால், நம்முடைய வெங்கலப்பிரனை, வெள்ளாங்குளத்து ஏரியில் அடியில் கிடக்கிறது, முன்காலத்தில் வெள்ளாங்குளத்தேரியில், தண்ணீர் அதிகமாக வந்து ஏரிதாங்காமல் உடைத்துக் கொண்டு போகும்போது, என்னுடைய அப்பாரு, தண்ணீரைக் குறுக்காட்ட வெங்கலப்பிரனையை, அணை கொடுத்தாரும்! அது அப்படியே பாதாளத்தில் இறங்கி விட்டதாம்) 248 249 அதற்கு, இப்போது பூஜை செய்து மேலே எடுத்துத்தான், தாட்டுப்பறை சாட்ட வேண்டும், ராஜாவே!'

சி·சாமி· 'சரி, நல்லது! சாம்புகா! பூஜைக்கு, என்ன சாமா
ணம் வேண்டும்! சீக்கிரம், சொல்?'

சாம்புகன்· 'ராஜாவே!

பாட்டு

"அவரை நல்லோ அவரை கலந்தது போல்
ராஜாவே ஐநூர்கலம் பச்சரிசி வேணுமுங்கோ,
துவரை நல்லோ துவரை கலந்தது போல்
தொன்னூர் கலம் பச்சரிசி வேணுமுங்கோ.
உடைக்கும் சிறு தேங்காய் ராஜாவே
ஒன்று லக்ஷம் வேணுமுங்கோ.
படைக்கும் நல்ல சிறு தேங்காய் ராஜாவே
பத்து லக்ஷம் வேணுமுங்கோ.
நாடம் பழம் நானூறு ராஜாவே
மொந்தம்பழம் மூன்னூறு.
ஆனைத்தல போலே ராஜாவே
ஐநூறு செங்கரும்பு.
குதிரைத்தல போலே அங்கே
கோடி லக்ஷம் செங்கரும்பு."

ராஜாவே! இன்னும், கருகிடாய் ஆயிரம், கருங்
கோழி ஆயிரம், கரும்பன்றி, ஆயிரம்,
எருமைக்கிடாய், ஆயிரம் வேண்டும், இவை
யெல்லாம் பலி கொடுத்தால் தான், பீரணியை
எடுக்க முடியும்' என்றான்.

சி. சாமி. 'சாம்புகா, நல்லது! சாமானங்களை சீக்கிரம்
வாங்கிக் கொண்டு போய், பூஜை செய்து,
பிரானையை, எடு' என்று, சொல்லி விட்டு.
அடி, குப்பி! சாம்புகன், வேண்டுமென்கிற சாமா
ணங்களை, சீக்கிரம் கொடு' என்றார்.
சாம்புகன் தேவையான சாமாணங்களை
வாங்கி, மூட்டை கட்டி தலையில் வைத்துக்
கொண்டு, வீட்டுக்குச் சென்று தன்னுடைய
தாயாரிடம், 'அம்மா! இன்று, வெங்கலப்பிர
ணக்கு, பூஜை செய்து மேலே எடுக்க
வேண்டும்! நீ, சீக்கிரம் குளித்து விட்டு,
பச்சை மாவு இடித்துக் கொண்டு, வெள்
ளாங் குளத்தேரிக்கு, வா! நான் முன்னால்
செல்கிறேன்' என்று, சொல்லி விட்டு,
சாம்புகன் சாமாண்ங்களை எடுத்துக் கொண்
டு, எருமைக்கிடாய்கள், ஆட்டுக்கிடாய்கள்,
கருங்கோழிகள், பன்றிகள், இவையெல்லாம்
ஓட்டிக் கொண்டு, ஏ. ஜாதி எருமைக்கிடாரி
இரண்டு பிடித்துக் கொண்டு, வெள்ளாங்
குளத்தேரிக்குப் புறப்பட்டான்.

பாட்டு

"ஓட்டம் பெருநடையா பெருநடையா
ஒரு விரைவாய் சாம்புகன் வாறானே
வண்டோட்டம் வெகு விரைவாய் வெகு விரைவாய்
வாறானே என் சாமி சாம்புகனும்!"

சாம்புகன் வெள்ளாங்குளத் தேரிக்கு வந்து, சாமானங்களையெல்லாம் கீழே வைத்து விட்டு, சுற்றிலும் கரும்புகளால் பந்தல் போட்டான். பிறகு, படுக்க மேகமாக, ஒரு காலில் மண்டியிட்டு, ஒரு காலில் தண்டு வாங்கி உட்கார்ந்து, மாயவனை நினைத்து, 'நான் வந்ததால் பிறந்தது, உண்மையானால்! தெய்வ சபையிலிருந்து, ஆயிரம் கணபூதங்கள் கீழே வரவேண்டும், காஞ்சி நாதா!' என்று சாம்புகன் மாயவனை நினைக்கும் போது, மாயவர் சாம்புகன் வேண்டுவதை பார்த்து, உடனே தெய்வ சபை சென்று, ஆயிரம் கணபூதங்களை கீழே அனுப்பி வைத்தார்.

249 250

கணபூதங்கள் ஆயிரமும், பொன்விளங்கு வெள்ளாங்குளத் தேரிக்கு வந்து, சாம்புகனை கண்டு நமஸ்காரம் செய்தது.

சாம்புகன்: பூதங்களே! வந்து விட்டீர்களா? நல்லது!

சரி, இதோ! இந்த இடத்திலிருக்கும், ஏதை கிடாரி இரண்டையும் விட்டு விட்டு, மற்ற பன்றி, கோழி, ஆட்டுக்கிடாய், எருமைக் கிடாய் இவையெல்லாம் அறுத்து, சீக்கிரம் சமையுங்கள்' என்றான். அப்போது, சாம்புகனின் தாயார், வீட்டிலிருந்து வந்து சேர்ந்தாள்.

சாம்புகன்: 'அம்மா! நீங்கள், மாவிளக்கை வைத்து விட்டு பொங்கல் வையுங்கள், நான் அரண்மனைக்கு போய் விட்டு, வருகிறேன்' என்று, புறப்பட்டான். சாம்புகன் அரண்மனைக்கு வந்து, சின்னண்ண சாமியைக் கண்டு 'ராஜாவே! பன்றி குத்தும் பாரவேலை, எடுத்துக் கொடுங்கள், பிரணியை, அதில் தான் குத்தி மேலே எடுக்க வேண்டு'மென்றான்.

சின்னண்ண சாமி, உடனே பாரவேலை எடுத்து வந்து கொடுத்தார். சாம்புகன் வேலை வாங்கிக் கொண்டு, வெள்ளாங் குளத்தேரிக்கு வந்து தண்ணீரில் இறங்கி குளித்து, பாரவேலையும் நன்றாக கழுவி மேலே கொண்டு வந்து, கரும்புப்பந்தலுக்குள் பாரவேலை நிறுத்தி, அதற்கு பொட்டு வைத்தான். பிறகு,

சாம்புகன். 'அம்மா! பொங்கல், ஆகி, விட்டதா?'

தாயார். 'மகனே! பொங்கல் ஆகி விட்டது.'

சாம்புகன். சரி, நல்லது! என்று கரும்பு பந்தலில், மீன்று படப்புசாதம் படைத்து, மாவிளக்கையும் முன்னால் வைத்து, முதல் பூஜை நடத்தினான். பிறகு, அந்தப்படப்புகளை அப்புறம் எடுத்து விட்டு, மறுபடி, ஆயிரம் இலைபோட்டு சாதம் படைத்து, சமைத்து வைத்திருந்த மாமிசங்களையும், ஆயிரம் இலையிலும் படைத்தான். பிறகு, மாயவனை நினைத்து மாயவா! நான், பூஜை செய்து முடிக்கு முன், பாதாளத்தில், வெங்கலப் பீரனைய காவல் புரியும், ஆயிரம் பூதமும் என்னிடம் வந்து கைகட்டி நிற்க வேணும், காந்திநாதா! என்று சாம்புகன் பூஜையை ஆரம்பித்தான். அப்போது, பாதாளத்திலிருந்து ஆயிரம் பூதமும் மேலே வந்து, சாம்புகன் முன் கைகட்டி நின்றது. அதை பார்த்ததும், சாம்புகன் ஓடி, ஏழைக் கிடாரி இரண்டையும் பிடித்து வந்து அறுத்து, ரத்தத்தைப் பிடித்து, அதில் சாதம் போட்டு பிணைந்து வைத்துவிட்டு பிறகு, ஆயிரம் படப்புக்கும் தண்ணீர் தெளித்து

பூஜை ஆரம்பித்தான். பூஜை செய்து முடித்து விட்டு, ரத்தமும் சோற்றையும் எடுத்து வெள்ளாங்குளத்து ஏரியை சுற்றியும் வீசினான். அப்போது, பாதாளத்திலிருந்து வந்த ஆயிரம் பூதமும், ஓடி, ரத்தஞ் சோத்தை கவ்விக் கொண்டு ஓடிவிட்டது. பிறகு, சாம்புகன் தெய்வசபையிலிருந்து வந்து பூதங்களை நோக்கி, 'அடே பூதங்களே! நீங்கள், ஆளுக்கொரு படப்புகளை எடுத்துக் கொண்டு தெய்வசபைக்கு போங்கள்' என்றான். உடனே ஆயிரம் பூதங்களும், ஆளுக்கொரு படப்பை எடுத்துக் கொண்டு தெய்வசபை போய்ச் சேர்ந்தது. பிறகு சாம்புகன், தாயாரிடம் சென்று 'அம்மா! நீங்கள், பொங்கலை எடுத்துக் கொண்டு மற்ற சாமானங்களையும் எடுத்துக் கொண்டு, வீட்டுக்குப் போங்கள், என்னுடைய படப்பை வைத்து விட்டுப் போங்கள்' என்றான். உடனே சாம்புகனின் தாய், பொங்கலையும், மற்ற சாமானங்களையும், எடுத்துக் கொண்டு வீடு போய்ச்சேர்ந்தாள்.

பிறகு சாம்புகன் வடக்கு முகமாக உட்கார்ந்து,
தெய்வசுமையை நினைத்து, மாயவனை நினை
த்து படப்புசாதத்தை, தின்று, உருண்டை
யாக செய்து தாய்விட்டு விட்டு, கை கால்
கழுவி வந்து ஆட்டுக்கிடாய்த் தோல்
இரண்டையும் உரித்து, மேட்டி வைத்து விட்டு,
பன்றி குத்தும், பாலவேலை எடுத்து, வடக்கு
முகமாக நின்று, மாயவனை நினைத்து, வேலை
பூமியில் ஊனினான். பாலவேல், கிடு, கிடுவென்று
பாதாளத்தில் போகும் போது, பொன்வள
நாடு, நடுங்கியது. பாலவேல், கீழே சென்று
வெங்கலப் பிரணியில் மூட்டியதும், பிரணி
டிமிரென்று சத்தத்துடன் மேலே வந்து
சேர்ந்தது. சாம்புகன் பிரணியை எடுத்து
க் கொண்டு போய், தண்ணீரில் போட்டு, மண்
ணைப் போட்டு தேய்த்தான். பிரணியை நன்றாக
விளக்கி, சுத்தம் செய்து, எடுத்து வந்து
மேட்டில் வைத்து கிடாத்தோலைப் போட்
டு பிரணிக்கு வித்து கட்டினான். பிறகு,
பிரணி அடிப்பதற்கு தடி வேண்டு மென்று,
வெள்ளாங் குளத்து ஏரிமேல் இருந்த
கடைந்தப்பினையை ஒடித்து, அதை,

இரண்டாக ஒளித்துக் கொண்டு, பீரணி அருகில் வந்து வடக்கு முகமாக நின்று, மாயவனை நினைத்து, சாம்புகன் திம்மை அடிக்கும்போது, அந்தச் சத்தம் கேட்டு

ரதகஜ துரகதுர பதாதிகளும்! அஷ்டதிக்கு
ப்பாலர்களும்! எட்டுப்புவனங்களும்!
ஈரேழு பதினாலு லோகங்களும்! திகைப்
பம் கலங்கி அப்படியே, நடுங்கியது.

அப்போது தெய்வ லோகத்தில், ஈஸ்வரனும், மற்ற தேவர்களும், பூலோகத்தில், பொன்னரும், சங்கரும், பன்றிமேல் சண்டைக்குப் போவார்கள் போல் இருக்கிறது! அதற்கு சாம்புகன் பீரணியடிப்பது, தெய்வ லோகமே நடுங்கிறது என்று, பேசிக் கொண்டிருந்தார்கள்.

சாம்புகன், வெள்ளாங் குளத்து தேரிமேல் நின்று என்ன சொல்லி, பீரணி அடிக்கிறேன் என்றால்.

சாம்புகன். ஆயிரம், கிராமத்துக்கும், ஐம்பத்தாறு தேசத்துக்கும், சொல்வதென்னவென்றால்! வருகிற வெள்ளிக்கிழமை, பொன்னிவள நாட்டு ராஜா இரண்டுபேரும்!
வீரமலைக் காட்டுக்கு, வேட்டை பயணமுங்கோ!
பன்றிமேல் சண்டை பாரசண்டை போறாங்கோ!

கொம்பன் மேல் சண்டை குடிதிரட்டிப் போனாங்கோ!

ஆகையால், ஆயிரம் கிராமத்திலும், ஐம்பத்தாறு தேசத்திலும், பட்டிக்கொரு நாய், பண்ணையத்துக்கு ஒரு ஆள், கட்டிச் சோறும், கைத்தடியும், கண்டிப்பாய் வரவேணும்! வெள்ளிக்கிழமை, விடிய ஐந்து நாளிகைக்கு முன், கொக்குளஞ் சான் பள்ளத்தில் கூடவேணும் படைகள், செப்பூலாங் கானகத்தில் சேர்ந்து படை கூடவேணும், இது பொன்னிவள நாட்டு, அரசர் உத்தரவு! என்று, சாம்புகன் சொல்லி அடிக்கும் போது, அந்தச் சத்தம், ஆயிரங்கிராமம், ஐம்பத்தாறு தேச அரசர்களுக்கும், கேட்டது.

257

பிறகு, சாம்புகன் புறப்பட்டு, அரண்மனைக்கு வந்து, ராஜாக்களைக் கண்டு. 'ராஜாவே! பிரணியை எடுத்து அடித்து, ஆயிரம் கிராமத்துக்கும், ஐம்பத்தாறு தேசத்துக்கும், அறிக்கை கொடுத்து விட்டேன்' என்றான்.